கை கொடுத்து உறுதுணையாக இருக்கலாம். அப்படிப்பட்ட தகவல்களை உறுப்பினர் கொடுத்தால் தனியாக ஆய்வு செய்கிறோம்.

தருமபுரியில் பட்டுக்கூடு அரசு விற்பனை அங்காடி.

170—(*வினா எண் 9650)—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கூடு விற்பனைக்காக தருமபுரியில் அரசு அங்காடி இருந்தும் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி அரசு பட்டுக்கூடு அங்காடியில் விவசாயிகளால் விற்கப்படும் பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை அளிக்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே சரியான விலை கொடுக்கப்படுகிறதாகச் சொன்னார்கள். தமிழகத்திலேயே தர்மபுரியிலே, அந்த மாவட்டத்திலே விளைகின்ற பட்டுக்கூடுதான் சிறந்ததாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது. நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசில் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே சுமார் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அங்காடி கட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தர்மபுரி மாவட்டம் பட்டு உற்பத்தியிலே சிறந்த மாவட்டமாக இருப்பதால், அங்கே விவசாயிகள் விளைவிக்கின்ற

பட்டை அரசாங்கமே ஏற்று, அதாவது நல்ல விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யுமா என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற அரசு சம்பந்தமான நிறுவனத்திலே இதை வாங்குகிறார்கள். அதேபோன்று தனியார் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் உற்பத்தியாளர்களிடம் இருக்கும் பட்டை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கின்ற பட்டிற்கு நல்ல விலை கொடுக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை அடிப்படையாக வைத்து பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 171 முதல் 175 வரை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினா எண் 176 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் அறைகளில் தொலைபேசி இயங்காமலிருந்தது குறித்து.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே என்னிடம் கேட்டீர்கள். நான் பதில் சொல்லியிருக்கிறேன்.